# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 54
ஏப்ரல் 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**தானியேல்**

2651) கர்த்தரில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள் (9:4)
2652) கர்த்தருடைய நியாயப்பிரமாணங்களின் படி நட (9:9,1)
2653) கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடு (9:9,11,14)
2654) கர்த்தருடைய சத்தியத்தைக் கவனி (9:13)

**ஓசியா**

2655) கர்த்தரை, உன்னை உண்டாக்கினவரை மறந்து போகாதே (2:13 8:14)
2656) கர்த்தரை மதியாமலிராதே (4:10)
2657) கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணாதே (5:7)
2658) கர்த்தரைக் கோபப்படுத்தாதே (12:14)
2659) கர்த்தருக்காகக் காத்திரு (3:3)
2660) கர்த்தருடைய வார்த்தையைக் கேள் (4:1)
2661) கர்த்தரை அறி (5:4 6:3,6)
2662) தேவனைப் பற்றிய அறிவு கொண்டிரு (4:1)
2663) உன் இருதயத்தில் (7:14) கர்த்தரை நோக்கிக் கூப்பிடு (7:7)
2664) கர்த்தரைத் தேடு (7:10)
2665) கர்த்தருக்குச் செவிகொடு (9:17)
2666) கர்த்தருக்குப் பயப்படு (10:3)
2667) கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள்; அவைகளில் நட (14:9)
2668) தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு இடைவிடாமல் உன் தேவனை நம்பிக் கொண்டிரு (12:6)
2669) " என்னையன்றி வேறே தேவனை அறிய வேண்டாம்" (13:4)
2670) திருப்தியான மேய்ச்சலினால் உன் இருதயம் மேட்டிமையாகாதிருப்பதாக; அதினால் என்னை மறவாதே (13:6)
2671) பொய்யாணை இடாதே (4:2, : 10:4)
2672) பொய் சொல்லாதே (4:2)
2673) பொய்யின் கனிகளைப் புசியாதே (10:13)
2674) கொலை செய்யாதே (4:2)
2675) திருடாதே (4:2)
2676) விபச்சாரம் பண்ணாதே (4:2)
2677) நெறி தவறாதே (52)
2678) வஞ்சனை செய்யாதே (7:1)
2679) தனக்குத்தானே கனிகொடுக்கும் பலனற்ற திராட்சச்செடியாயிராதே(10:1)
2680) உன் வழியையும் உன் பராக்கிரமசாலிகளின் திரளையும் நம்பாதே (10:13)
2681) பொல்லாப்பு செய்யாதே (10:15)



2682) அநியாயஞ் செய்ய விரும்பாதே (12:7)
2683) இருதயத்தை மயக்கும் வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் வேண்டாம் (4:11)
2684) வேசித்தன ஆவி வேண்டாம் (5:4)
2685) அகந்தை வேண்டாம் (5:5,7:10)
2686) உன் கையில் கள்ளத்தராசு வேண்டாம் (12:7)
2687) உண்மையாயிரு (4:1)
2688) தேவன் விரும்பும் (6:6) இரக்கம் கொண்டிரு (4:1)
2689) நீதிக்கென்று விதை விதை; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறு; உன் தரிசு நிலத்தைப் பண்படுத்து (10:12)
2690) அநியாயத்தை உழுதால், தீவினையை அறுப்பாய் (10:13)
2691) தேவனிடத்துக்குத் திரும்பு (5:4)
2692) உன் கிரியைகளைச் சீரிதிருத்து (54)
2693) ஆசாரியனே! அறிவை வெறுக்காதே (4:6)

**யோவேல்**

2694) நீ இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும்,உன் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்பு (2:12)
2695) நீ உன் வஸ்திரத்தையல்ல; உன் இருதயத்தைக் கிழித்து, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு 2:13)
2696) பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் (2:12)
2697) உன் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூரு; அவர் தக்கபடி உனக்கு முன்மாரியைக் கொடுத்து, உனக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கெனவே வருஷிக்கப்பண்ணுவார் (2:23)
2698) உன்னை அதிசயமாய் நடத்திவந்த கர்த்தருடைய நாமத்தைத் துதி(2:26)
2699) நீ இரட்சிக்கப்பட கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள் (2:32)
2700) பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக (3:10)

## மிஷனெரி இல்லப் பிரதிஷ்டை

13.1.2013 அன்று திருச்சி மாவட்டம். தோப்புப்பட்டி பணித்தளத்தில் மிஷனெரிகள் தங்க, புதிய இல்லம் கட்டி முடிக்கப்பட்டு, அதன் பிரதிஷ்டை நடைபெற்றது. இல்லத்தை Rev.J.S.ஜெபராஜ் (பணித்தள இயக்குநர், கிருபையின் ஊழியங்கள்) அவர்கள் ஜெபத்துடன் திறந்து வைத்தார்கள். இல்லத்தின் கட்டுமானப் பணியை திரம்பட முடித்து, பிரதிஷ்டை ஆராதனையை ஜெபத்துடன் ஒழுங்கு செய்த, நமது பணித்தள மிஷனெரிகள் **சகோ. டேனியேல், திருமதி. எப்சிபா டேனியேல்** மற்றும் சபை விசுவாச சகோதார்கள் சகோ. சூசை மற்றும் சகோ. இன்னாசி மற்றும் யாவருக்காக தேவனைத் துதிக்கிறோம். 11.11.2012 முதல் இங்கு கிராமத்திலேயே தங்கி நமது மிஷனெரி குடும்பம் திருமதி. & திரு. டேனியல் இங்கு பணி செய்து வருகிறார்கள்.

# மன்னிப்போம்! ஜெபிப்போம்

( S. ஜெபராஜ் தலைவர், கிருபையின் ஊழியங்கள்)

கர்த்தரும் இரட்சகருமாகிய உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களனைவருக்கும் வாழ்த்துக்கள். அவனோ முழாங்காற்படியிட்டு ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான் (அப் 7:60) கிறிஸ்தவ சபையில் முதலாம் இரத்தச்சாட்சி என்கிற பெரும்பேற்றை அடைந்த ஸ்தேவான் என்பவருடைய ஜெபமே இது. ஜெபிக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு இவர் ஒரு முன்மாதிரி. இந்த ஸ்தேவான் என்பவர் கிரேக்க மொழி பேசின யூதன். ஆதித்திருச்சபையில் உதவிக்காரனாய் தெரிந்து கொள்ளப்படுவதற்கு தகுதி உடையவராயிருந்தார். விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவருமாயிருந்தார். (அப்6:5) ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யும்படி ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும், நிறைந்தவராயிருந்தார். (அர்6:8). கிறிஸ்துவுக்காய் முதல் இரத்தசாட்சியாய் மாறுவதற்கு அவர் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தரித்திருந்தார்.

### 1. கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ள ஸ்தேவான்

இந்த மேன்மையான நிலைக்குத் தன்னை அர்ப்பணிக்க ஸ்தேவானில் இருந்த சிறப்பான முதற்பண்பு விசுவாசம். இந்த விசுவாசம் ஒருவருக்கு இரட்சிப்பைக் கொண்டு வரும்(அப்14:9) தேவனையே சார்ந்து நிற்கிறவர்களாய் மாற்றும் (எபி6:1) ஆவியின் கனிகொடுக்கிறவர்களாய் (கலா5:22) ஆவியின் வரத்தை பெற்றுக்கொண்டு (1கொரி12:9) மேன்மையான விசுவாசத்தை பிடித்துக்கொண்ட பண்புடையவர்களாய் மாற்றும். கிறிஸ்துவுக்காய் உங்களை அர்ப்பணிக்க விசுவாசமே அடிப்படையாய் அமைந்திருக்க வேண்டும். அரைகுறையான விசுவாசமோ, அவிசுவாசம் கலந்த நிலையோ இல்லாதபடி விசுவாசத்தில் பரிபூரணம் நிறைந்தவர்களாயிருக்கவேண்டும். ஆபிரகாம் தேவன் பேரில் வைத்திருந்த விசுவாசமே ஈசாக்கை பலிபீடத்தில் அர்ப்பணிக்கத் தூண்டியது. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதில்லை என்பதே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் அசைக்கமுடியாத வைராக்கியமான விசுவாசம். (தானி 3:17 18). தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டி போடுவார் என்பதே தானியேலின் விசுவாசம்(தானி6:22) ஏனெனில் அவரே நாம் இடைவிடாமல் ஆராதிக்கிற



தேவன் (தானி6:16 20) ஜீவனை பணையம் வைத்து நாம் தேவனுக்காய் சாட்சியாய் நிலைநிற்குமளவிற்கு உங்கள் விசுவாசம் ஆழமாயும், உயரமாயும் வளர்ந்திருக்க வேண்டும்.

### 2. பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஸ்தேவான்

உதவிக்காராய் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் பிரதானமானவராகிய ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராயிருந்தார். (அப் 6:5). இந்த ஆவியானவரின் நிறைவே அவர் இரத்தச்சாட்சியாய் தன்னை அர்ப்பணிக்க அவரைப் பலப்படுத்திற்று. உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்றேன் என்கிற பவுலின்சாட்சி, பவுல் தன்னை வாரினால் அழுந்த கட்டப்படுவதற்கும் சவுக்கால் அடிக்கப்படுவதற்கும் தன்னை கிறிஸ்துவுக்காய் தியாகம் செய்வதற்கும் தூண்டியது. (அப்22:20 25) நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படமுடியும். (எபே6:18),இந்த ஆவியினாலே ஜெபமும், (எபே. 6:18) தேவனுக்கு ஆராதனையும் (பிலி3:3) பரிசுத்தமாக்கப்படுதலும் (2தெச2:13) தெளிந்த புத்தியும் (2தீமோ 1:7) சாட்சி கொடுத்தலும் (1யோ5:6) உங்கள் வாழ்க்கையில் சாத்தியமாகிறது. நீங்கள் சுவிஷேசத்தை பிரசங்கிக்கும்படி உங்களை அபிஷேகம் பண்ண (லூக்4:18) நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் (யாக் 4:5). பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, பூமியின் கடைசிபரியந்தமும் கர்த்தருக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப் 1:8). நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதையும் கிறிஸ்து உங்களில் நிலைத்திருப்பதையும் அவர் நமக்கு தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம் (1யோ3:24). எனவே தேவனுடைய பிள்ளைகளே எப்பொழுதும் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிற அனுபவத்திற்குள்ளாய் கடந்து வாருங்கள். கிறிஸ்துவினிமித்தம் நீங்கள் பாடுகளையும், உபத்திரவங்களையும், நிந்தைகளையும் அனுபவிக்கும்போது பரிசுத்த ஆவியானவரின் நிறைவு உங்களைப் பெலப்படுத்தும். சாட்சிகளாய் மாற்றும். இந்த ஆவியின் அபிஷேகத்தின் நிறைவை வாஞ்சித்து பெற்றுக்கொள்ளுங்கள்.

### 3. ஞானம் நிறைந்த ஸ்தேவான்

ஆதித்திருச்சபையில் சீஷர்கள் பெருகினபோது, அன்றாடக விசாரணை செய்வதற்கும், பந்தி விசாரிப்பு செய்வதற்கும் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்த ஏழு பேரை நியமிக்கும் பொழுது இந்தத் தகுதிகளையுடைய ஸ்தேவான் முதல்வராய் நிற்கின்றார். (அப்6:5). ஸ்தேவான் பேசின ஞானத்தையும் ஆவியையும் தர்க்கம் பண்ணினவர்களால் எதிர்த்து நிற்கக்கூடாமல் போயிற்று (அப் 6:10). தேவனுக்காய் எந்த ஒரு செயலையும் செய்ய தேவஞானம் வேண்டும். ஞானம் எங்கேயிருந்து வரும்; புத்தி தங்கும்

இடம் எங்கே? இதோ ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி (யோபு 28:20,28) கர்த்தர் ஞானத்தை தருகிறார் (நீதி 2:6). ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் (நீதி 11:30) கிறிஸ்துவுக்காய் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் பணியில் ஈடுபட்டதினாலே தேவன் அவருக்கு ஞானத்தைக் கொடுத்தார். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவனையும் கடிந்த கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள். தேவனுக்கு சாட்சியாய் இருங்கள்.

**4. பகைப்போரையும் மன்னித்து ஜெபித்த ஸ்தேவான்.**

இயேசுவின் சிறப்பான போதனைகளில் ஒன்று "சத்துருக்களை சிநேகியுங்கள்" என்பது தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் (மத் 5:39-48) இயேசுகிறிஸ்து இதை போதித்தது மாத்திரமல்ல, தாமே இதை சாதித்தும் காட்டி முன்மாதிரியை நமக்கு வைத்துப் போனார். ஏழுதரம் அல்ல ஏழெுபது தரம் என்று மன்னிக்கும் தயாள குணத்தை நாம் தரித்துக் கொண்டவர்களாயிருக்க வேண்டும் என்று கற்பித்தார். சிலுவையில் வேதனைகள், பாடுகள், நிறைந்தவராய் தொங்கும் போதும் கூட சிலுவையில் அறைந்தவர் களுக்காக, பாடுபடுத்தினவர்களுக்காக, அதற்கு காரணமாயிருந்தவர்களுக்காக, இகழ்ந்து நிந்திக்கிறவர்களுக்காக ,துன்பப்படுத்துகிறவர்களுக்காக, தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறவர்களுக்காக, பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று மன்னிக்கிறவராகவும், பரிந்து பேசுகிறவராகவும், இயேசு மாதிரியை வைத்து போனார் (லூக் 23:34-37). அதை அப்படியே பிரதிபலித்தார் ஸ்தேவான். அவர் மீது மூர்க்கமடைந்து பொய்க்குற்றம் சாட்டி எதிர்த்து காயப்படுத்தின மக்களுக்காக முழங்கால் படியிட்டு ஆண்டவரே இவர்கள் மீது இந்த பாவத்தை சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொல்லி நித்திரையடைந்தான்.(அப்7:60) ஸ்தேவானின் விசுவாசமும், பரிசுத்த ஆவியின் நிறைவான வாழ்க்கையும், ஞானம் நிறைந்த தகுதியும், பகைத்தவர்களையும் காயப்படுத்தினவர்களையும், எதிர்த்தவர்களையும், மன்னித்து ஜெபித்த ஜெபமும், நமக்கு முன்மாதிரி அல்லவா?

**எனது தீர்மானம்:** ஸ்தேவானைப்போல, பகைப்போரையும் காயப்படுத்துவோரையும், எதிர்ப்போரையும் மன்னிக்க அவர்களுக்காய் ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன்.



# கொலோசெயருக்கு எழுதிய நிருபம்

**Dr. P. செல்வராஜ் கோவை.**

## அதிகாரம் - 1

### *பகுதி-1 முன்னுரை*

### *அப்போஸ்தல வாழ்த்துக்கள் (வசனம் -1-18)*

1. அப்போஸ்தலர் என்னும் சொல்லுக்கு எவ்வாறு பொருள் கொள்வீர்கள்?
2. பவுல் கொலோசெயரைப் பற்றி கேள்விப்பட்ட இரண்டு சிறந்த பண்புகள் எவை?
3. எப்பாப்பிராவின் இரண்டு இணைப்பொறுப்பு எவை?
4. கொலோசெயரைப்பற்றி பவுலிடம் எப்பாப்பிரா எத்தகைய அறிவிப்பை செய்திருந்தார்?

### *பகுதி- II அப்போஸ்தலரின் ஜெபம் (வசனம் -9-14)*

5. கொலோசெயர் எதனால் நிரப்பப்பட வேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார்?
6. கனிகளை பற்றி குறிப்பிடும் போது பவுல் பயன்படுத்தும் அடைமொழி என்ன?
7. கொலோசெயர் எதில் வளர வேண்டுமென்று பவுல் ஜெபித்தார்?
8. கொலோசெயர் எதில் பலப்பட வேண்டுமென்று பவுல் ஜெபித்தார்?
9. பொறுமையையும், நீடிய சாந்தத்தையும் பவுல் எவ்வாறு தகுதிப்படுத்துகிறார்?
10. பரிசுத்தவான்களைப் பற்றி குறிப்பிடும் போது பவுல் தருகின்ற விளக்கம் என்ன?
11. தேவனுடைய இராஜ்யத்திற்கு பவுல் கொடுக்கும் இன்னொரு பெயர் என்ன?
12. மீட்பு என்ற சொல்லுக்கு பவுல் தரும் விளக்கம் என்ன?

### *பகுதி -III கிறிஸ்துவின் உயர்வு (வசனம் - 15-29)*

### *(i) கிறிஸ்துவின் சிறப்புகள் (15-19)*

13. காணமுடியாத தேவனை கிறிஸ்துவில் காணலாம் என்பதை பவுல் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
14. படைப்பனைத்தும் யாருக்காகப் படைக்கப்பட்டது என்று பவுல் கூறுகிறார்.
15. யார் எல்லாவற்றிற்கும் முந்தினவர்?
16. கிறிஸ்து எந்த சரீரத்துக்கு தலைவராயிருக்கிறார்?
17. கிறிஸ்துவுக்குள் சகல பரிபூரணமும் வாசமாயிருப்பது தேவனுக்கு எப்படி இருந்தது?

### *(ii) கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியம் (வச.-20-23)*

18. கிறிஸ்து தம்முடைய தியாகபலியினாலே எல்லாவற்றையும் யாரோடு ஒப்புரவாக்கினார்?

19. ஒப்புரவாக்கப்பட்ட சத்துருக்கள் எந்த வகையில் முன்னர் சத்துருக்களாக இருந்தார்கள்?
20. நம்மை அவருக்கு முன் எப்படி நிறுத்தும்படியாக ஒப்புரவாக்கியிருக்கிறார்?
21. பவுல் எதற்கு ஊழியக்காரன் ஆனான்?

### *(iii) கிறிஸ்துவின் இரகசியம் (வசனம் - 24-29)*

22. கிறிஸ்துவின் பாடுகளுக்கும் இங்கே பவுல் குறிப்பிடுகிற அவரின் பாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்று நினைக்கிறீர்கள்?
23. தலைமுறை தலைமுறைக்கும் மறைவாயிருந்தது எது?
24. தேவன் தெரியப்படுத்த சித்தமாயிருக்கும் இரகசியம் என்ன?
25. அறிவித்தல் புத்தி சொல்லுதல் மற்றும் உபதேசம் ஆகிய மூன்றின் நோக்கம் என்ன?
26. பவுலின் மேற்கூறிய முயற்சிக்கு தேவைப்பட்ட பலத்தை அவர் எவ்வாறு அழைக்கிறார்?

## *அதிகாரம் - 2*

## *பகுதி - IV கிறிஸ்துவின் தெய்வத்துவம் (வச. 1-23)*

27. பவுல் எதை ஐசுவரியம் என்று குறிப்பிடுகிறார்?
28. கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கும் பொக்கிஷங்கள் என்ன?

### *(i) நயவசனிப்பால் ஏற்படும் ஆபத்து (வச. 4 - 7)*

29. கொலோசெயருடைய எந்த தன்மைகள் பவுலுக்கு மகிழ்ச்சியாயிருப்பதாக இருந்தன?
30. கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்ட பிறகு நாம் செய்ய வேண்டியது என்ன?
31. கொலோசெயர் எதில் வளர வேண்டுமென்று பவுல் அவர்களை வாழ்த்துகிறார்?
32. எதனால் நாம் அவரோடே கூட எழுந்தவர்களாக இருக்கிறோம்?

### *( ii) தத்துவம் (லௌகிக ஞானம்) (பாரம்பரிய நியாயம் உலகவழிபாடு மற்றும் பிரமாணம் பற்றிய எச்சரிப்பு (வசனம் - 8)*

33. தத்துவமும் பிரமாணமும் எதற்குரியவை?

### *(iii) முழுமை (வசனம் 9 - 13)*

34. தெய்வத்துவத்தின் பரிபூரணம் ஆவிக்குரிய ரீதியில் மட்டும் கிறிஸ்து இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறதா?
35. பாவத்துக்கும், விருத்தசேதனம் இல்லாமைக்கும் மரித்த நம்மை உயிர்ப்பிப்பதற்கு கிறிஸ்து இயேசு செய்தது என்ன?



### *(vi) கிறிஸ்துவில் நியாயப்பிரமாணமில்லை (வச.14-17)*

36. சிலுவை மேல் ஆணியடிக்கப்பட்ட கையெழுத்து என்பது எதைக் குறிக்கிறது?
37. எவைகளை வருங்காரியங்களின் நிழல் என்று பவுல் குறிப்பிடுகிறார்?

### *(v) பாரம்பரியத்தை குறித்து எச்சரிப்பு (வச.18-19)*

38. எவற்றால் நமக்குரிய பந்தயப்பொருளை நாம் இழந்து போவதற்கான வாய்ப்பு இருக்கிறது?
39. இப்பொழுது தேவ தூதர்களுக்கு ஆராதனை செய்யப்படுகிறதா?

### *(vi) ஞானமார்க்கத்தைப் பற்றி எச்சரிப்பு (வச. 20-23)*

40. சரீர ஒழுக்கம் எதற்கு மட்டும் பயன்படும்?

## *அதிகாரம் -3*

## *பகுதி -V கிறிஸ்துவின் ஐக்கியம் (வச. 1-4)*

41. நாம் ஏன் பூமியிலுள்ளவைகளல்ல மேலானவையே நாட வேண்டும்?
42. கிறிஸ்து என்னவென்று அழைக்கப்படுகிறார்?

## *பகுதி - VI கிறிஸ்துவ வாழ்க்கை ( வச.5-25)*

44. நாம் தரித்துக் கொண்டிருக்கும் புதிய மனிதன் எத்தகைய பூரண அறிவை அடைய வேண்டும்?
45. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தர் எத்தகைய ஆடைகளை தரித்தக்கொள்ள வேண்டும்?
46. அன்பை பற்றி குறிப்பிடும் போது எத்தகைய அன்பு என்று பவுல் குறிப்பிடுகிறார்?
47. கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே எப்படி வாசமாயிருக்க வேண்டும்?
48. பாடல்களால் போதிக்கவும், புத்தி சொல்லவும் வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?
49. மனித உறவுகளில் முழுமையான உண்மையுடன் நாம் இருக்க நிபந்தனை ஏதாவது இருக்கிறதா?
43. தேவ கோபாக்கினை எதனால் மனிதன் மீது வருகிறது?
44. நாம் தரித்துக் கொண்டிருக்கும் புதிய மனிதன் எத்தகைய பூரண அறிவை அடைய வேண்டும்?
45. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தர் எவை எவைகளை தரித்துக்கொள்ள வேண்டும்?
46. அன்பை பற்றி குறிப்பிடும் போது எத்தகைய அன்பு என்று பவுல் குறிப்பிடுகிறார்?
47. கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே எப்படி வாசமாயிருக்க வேண்டும்?
48. பாடல்களால் போதிக்கவும், புத்தி சொல்லவும் வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?
49. மனித உறவுகளில் முழுமையான உண்மையுடன் நாம் இருக்க நிபந்தனை ஏதாவது இருக்கிறதா?

### *அதிகாரம் - 4 (வசனம் 1-6)*

50. பவுல் எதற்காக தங்களுக்காக ஜெபம் பண்ணவேண்டுமென்று சபையாரை கேட்கிறார்?
51. புறம்பே இருப்பவருக்கு முன்பாக நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
52. நம்முடைய உரையாடல் எப்படி இருக்க வேண்டும்?

### *பகுதி -VII கிறிஸ்துவ ஐக்கியம் (வசனம் 7-18)*

53. எப்பாப்பிராவின் கொலோசெயருக்கு ஜெபம் என்ன?
54. இல்ல சபைகளுக்கு எடுத்துக்காட்டாக கூறப்பட்டிருக்கும் சபை எது?
55. அர்க்கிப்புக்கு பவுல் கொடுக்கக்கூடிய அறிவுரை என்ன?
56. இந்த நிருபத்தில் உங்களுக்கு பிடித்தமான வசனம் ஒன்றை குறிப்பிடவும். (ஓன்றிற்கு மேற்பட்ட வசனம் இருந்தாலும் குறிப்பிடவும்)

**எல்லா கேள்விகளுக்கும் சரியாக பதில் எழுதி அனுப்பும் ஒவ்வொருவருக்கும் பரிசு உண்டு**

## MECOGEN - V.B.S - 2013 - ஜெபக்குறிப்புகள்

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம்.

1. வெளி3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. மாற்.18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள..
3. ஏசா.54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
4. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகள் (4 இடங்களில்) தேவன் ஆசீர்வதிக்க..
5. இவ்வூழியத்திற்குத் தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப...
6. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக.9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
7. ஒரு VBSக்கு ரூ.3000 வீதம் கொடுத்து தாங்குவோரை தேவன் எழுப்ப..
8. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர....
9. இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை ரூ. 9 இலட்சத்து 75 ஆயிரம் சந்திக்கப்பட
10. VBSநடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க.
11 VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட.



# கிருபை பெருக கிருபாமொழிகள்

### *பா. பொற்செல்வன் ஆசீர்*

1. சில விசுவாசிகள் வயதாகி விடுகிறார்க்ள. ஆனால் வளருவதேயில்லை.
2. ஜெபிக்காத பிரசங்கி தனக்கும், சபைக்கும், உலகுக்கும் சாபமானவன்.
3. நான் இன்று குறைவாக ஜெபித்தேன் என்னும் சொல் தேவப்பிள்ளை கூறும் மரண வாக்குமூலம் ஆகும்.
4. ஜெபம் என்ற தூபம் எங்கே எழும்பிற்றோ, அங்கே வல்லமை என்னும் நறுமணம் வீசும் என்பதில் ஐயமில்லை.
5. தேவனை நம்பிடும் நீங்கள் தேவனால் நம்பப்படும் நபராய் மாறிவிடுங்கள்; அப்போது அவர் வல்லமை உங்களுக்கென்றும் உங்களிலிருந்தும் வெளிப்படும்.
6. எழுப்புதல் வீரர்கள் மனுஷருக்கும், அவர்கள் சட்டங்களுக்கும் கீழ்ப்படிவதிலும், தேவனுக்கு கீழ்ப்படிவதையே பிரதானமாய் கொண்ட சாதாரண மனிதர்களே!
7. மனுஷரை பிரியப்படுத்த தெரிந்தவன், தேவனைப்பிரியப்படுத்த மறந்தவன், இவனே எழுப்புதல் கொல்லி.
8. ஊழியப்பயிற்சி ஓர் ஊழியர் தரலாம்; ஜெபபயிற்சி தருவது தேவனே;-
9. ஜெபப்பள்ளி என்பது ஒரு தெய்வீகப்பள்ளி; அது உங்கள் ஜெபஅறையே; இப்பள்ளியின் ஆசிரியர் பரிசுத்த ஆவியானவர்.
10. தேவனுக்கு வருமானத்தில் மாத்திரமல்ல நேரத்திலும் தசமபாகம் செலுத்துங்கள். இல்லையெனில் தேவனை வஞ்சிக்கிறீர்கள்.
11. அசதியாய் ஜெபிப்பவன் அடைவதொன்றுமில்லை ஆனால் ஊக்கமாய் ஜெபிப்பவன் அக்கினிக்கு சமம்.
12. ஜெபமும் துதியும் உடன் பிறப்புகள்; ஜெபமும் உபவாசமும் இரட்டையர்கள்.
13. தன்னை மாற்றாது ஜெபிக்கும் ஜெபம் பிறரைமாற்றாது. தேவனிடத்தில் அதற்கு பதில் இல்லை.
14. இன்றைய தேவை வேதம் கையில் எடுக்கும் கிறிஸ்தவர்கள் அல்ல; நடமாடும் வேதாகமங்களாகும் கிறிஸ்தவர்களே 2கொரி 3 : 3.
15. இயேசுவை அதோ என சுட்டிகாட்டி நிற்கும் கூட்டத்தின் (பிரசங்கிகள், விசுவாசிகள்) மத்தியில் இயேசவை தன்னில் வெளிப்படுத்தும் மாந்தரை தேவனின் கண்கள் தேடுகிறது.
16. இயேசுவை பிரசங்கிக்கும் தங்கள் (சிறந்த வசனிப்பான) பிரசங்கங்களால் பிரகாசிப்போர் இன்று ஏராளம். ஆனால் எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியான இயேசுவால் பிரகாசிப்போர் வெகு சிலரே நீங்கள் யார்? யோவா 1 : 9.
17. இயேசு எப்படிப்பட்டவரோ? என காணத்துடிக்கும் சகேயுகளுக்கு இயேசுவை வார்த்தையால் மட்டுமல்ல வாழ்வினால் காட்டும் நபரே

இன்றைய தேவை.1கொரி11:1

18. தேவனைத் தேடும் திரள் ஏராளம்; தேவன் தேடும் மாந்தரோ வெகுசிலரே; தன்னை தேவனுக்காய் பலியாக்க துணிந்தோரே இந்த வெகு சிலர்.
19. அன்பில்லா ஆவியின் நிறைவு இசையில்லா வெண்கலம் எழுப்பும் வெறும் சத்தமே; தாளமிழந்த கைத்தாளத்து ஓசையே; எனவே அன்பில் நிலைத்திருங்கள்.
20. ஆத்துமாக்கள் கட்டுண்டு கிடப்பது பாவக்கயிறுகளால் காரணம் கண்ணீர் நிறைந்த (ஏரே 9:1-3) தேவனை சேவிக்கும் கண்ணீரற்ற கண்களையுடைய மாந்தர்களே இது உண்மை.
21. நீ தேவன் பக்கமே சார்ந்திருந்தால் என் தேவன் உன் பக்கமே சேர்ந்திருப்பார்.
22. இன்றைய தேவை - ஆவிக்குரிய யுத்தத்தில் வசதி, நலன், சுகம், பெலன் தேவையானால் ஜீவனையும் தியாகம் பண்ணத் தயங்காதோர்.
23. உலகின் ஆசாபாசங்கள் இவர்களை ஒன்றும் செய்யாது ஏனெனில் இவர்கள் கவர்ச்சி இயேசுவே - இவர்களே எழுப்புதல் வீரர்கள்.
24. நமது ஏக்கம் பிரசங்க பீடத்தில் மிடுக்கு நடைஉபதேசி (ஊழியன்) அல்ல. தேவபாரம் பெற்ற தீர்க்கதரிசி அப்போது எழுப்புதல் வரும்.
25. உன் செவி நாடுவது நயங்காட்டும் பிரசங்கங்களையா? அல்லது உன்னை நயமாக்கும் அக்கினி சந்திப்பையா?
26. தினமும் தன்னை சுத்திகரிக்கும் தேவ அக்கினியை சந்தியாது உலகை சந்திக்கும் ஊழியன் வெறும் வாய்ச்சாலகனே.
27. வேதத்தோடு ஜெபி. ஜெபத்தோடு வேதம் வாசி. உன் வேதவாசிப்பு தினமும் உன் ஜெபத்தை புதிதாக்கட்டும். அப்போது நீ புதிதும் கூர்மையுமான எந்திரமாவாய்.
28. வாக்குத்தத்தங்களை சிறந்தது தான் அவைகள் உன்னை பூரிப்பாக்கும். கட்டளைகள் மிகச்சிறந்தது ஏனெனில் அது உன்னை புதியவனாக்கும்.
29. வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க கட்டளைகளுக்கு கீழ்ப்படி, நீ வழிதப்பிப் போவதில்லை 2கொரி 7:1
30. தேவசத்தம் கேட்ட செவிகள் வேறு சத்தத்தால் திருப்தி அடையாது; இது உண்மையே.
31. தேவனின் தேவை - ஆத்துமபாரம் நிறைந்த இதயம், செயல்படும் தியாகமாண்பு கொண்ட மாந்தர், இவரே தேவனின் கையில் பயனுள்ள பாத்திரங்கள்.
32. தன் கோபத்திற்கு நியாயம் கற்பிக்கும் இதயம் உணர்வடையா இருதயம்.
33. கோபம் உருவாக்குவது ஒன்றுமில்லை, ஆனால் உடைத்தெறிந்தவைகள் ஏராளம்.
34. தேவதிட்டம் அன்பில் உருவானது அதை உடைத்தெறிய சத்துரு பயன்படுத்தும் ஆயுதங்களில் ஒன்று கோபம்.
35. தேவை அற்புதங்கள் - தேசத்தையும் சபையையும் சுத்திகரிக்கும் அற்புதங்கள் இன்று தேவை.



36. ஜெபிக்காத மனிதன் தேவனுடைய கையை தடுத்து நிறுத்துகிறான். ஜெபிக்கும் மனிதனோ தேவனை துரிதப்படுத்துகிறான்.
37. ஜெபத்திலே நீங்கள் உங்களை ஊற்றிவிடுங்கள்; அப்பொழுது தேவன் தன்னை உங்களில் ஊற்றி விடுவார்.

# VBS - 2013

- **2 நாட்கள் VBS பயிற்சி நடைபெற வேண்டிய இடங்கள்.**
  1) தூத்துக்குடி 2) ஏழாயிரம்பண்ணை 3) சிவகாசி 4) செம்பட்டி
  ஒரு பயிற்சி நடைபெற தேவை ரூ. 25,000 மொத்த தேவை
  ரூ. 1 இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள். தாங்க முன் வாருங்கள்.
- **6 நாட்கள், 1 கிராமம் என நடைபெற வேண்டிய VBS க்கள் 325.**
  1 VBS நடத்த தேவை ரூ.3,000, மொத்த தேவை 9 இலட்சத்து 75 சந்திக்கப்பட ஜெபியுங்கள். தாங்க முன் வாருங்கள்

# திருவசனத் தேர்வு

நமது ஊழியத்தின் மூலம் வாரம் 4 என்ற புத்தகம் 52X4 வசனங்கள் என்ற அடிப்படையில் மனனம் செய்ய வெளியிடப்பட்டது. அந்த புத்தகத்தில் மொத்தம் 208 வசனங்கள் இருப்பிடம் எளிதில் நினைவில் வைக்க வசதியாக உள்ள விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் அடிப்படையில் ஒரு திருவசனத்தேர்வு நடைபெறும், தேர்வு ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் நடைபெறும். தேதி ஜீலை மாத இதழில் வெளியிடுவோம். தேர்வுகள் ஞாயிற்று கிழமை மதியம் 3 மணி முதல் 4.30 மணி வரை நடத்தப்படும்.

தேர்வு : **9 - 15 வயதினர்** **16 - 30 வயதினர்,**
**31 - 45 வயதினர்** **45க்கு மேலான வயதினர்**

என 4 பிரிவினர்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 பேருக்கு பரிசுகள் உண்டு, தேர்வினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

தேர்வை நீங்கள் உங்கள் ஆலயத்தில், ஜெபஜக்கியத்தில், பள்ளி, கல்லூரியில் எழுதலாம். ஒரு தேர்வு மையத்திற்கு 25 பேருக்கு குறையாமல் எழுத வேண்டும்.

அல்லது நாங்கள் குறிப்பிடும் மையத்திற்கு வந்து எழுத வேண்டும். 25 பேருக்கு குறையாமல் எழுதும் தேர்வு மையங்களுக்கு தேர்வு மையம் வாரியாக முதல் 3 பரிசுகள் உண்டு.

தேர்வுக்கு அனுமதி கட்டணம் : ரூ.20 /- மட்டும்.

**வாரம் 4 என்ற புத்தகம் தேவையானவர்கள் தபாலில் பெற ரூ. 25 அனுப்பியோ, நேரில் பெற ரூ. 20 செலுத்தியோ பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு**
94432 89026, 94421 20257, 94431 95395, 94861 71004, 94429 94126, 94862 33442, 9442913156, 94428 13511, 94881 03026

# துதியுங்கள் தேவனை

### *விருதுநகர் மாவட்டம்*

பணித்தளம் : சிவகாசி பல ஆண்டுகள் பிரிந்து இருந்த சகோ.இஸ்ரவேல் என்பவரின் குடும்பம் இணைக்கப்பட்டதற்காய் கர்த்தரை துதிப்போம்.

பணித்தளம்: ஏழாயிரம்பண்ணை தீபா என்ற சகோதரிக்கு குழந்தையில்லாமல் இருந்தது. ஜெபித்தோம் கர்த்தர் நல்ல குழந்தை பாக்கியத்தை கொடுத்ததற்க்காய் தேவனை துதிப்போம்

பணித்தளம் : சாத்தூர் - சந்தனகுமார் மனைவி லதா என்ற சகோதரியின் உடல் பெலவீனமாய் இருந்தது அதற்க்காக ஜெபித்தோம். தேவன் சுகம் தந்தற்க்காய் தேவனை துதிப்போம். மாலதி என்ற சகோதரியின் கணவருக்கு வேலையில் பதவி உயர்வு கிடைக்கும்படி அநேக நாள் ஜெபித்தோம். கர்த்தர் நல்லமுறையில் வேலையில் பதவி உயர்வு கிடைத்தற்க்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : புல்லக்கவுண்டன்பட்டி : ஆலய ஒளி பெருக்கி குறைகளை சரிசெய்து தந்த விஜயராஜ் செல்வி இவர்கள் குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : பண்டிதன்பட்டி : சகோ. காளிமுருகனுக்கு மூன்றாவது முறையாக குடல் வால்வு ஆப்ரேஷன் செய்து சுகம் கிடைக்க தேவன் உதவி செய்ததற்காக தேவனைத் துதிப்போம் சகோ.சங்கர் மனைவி தேவிக்கு (ஆண், பெண்) இரட்டை குழந்தைகளுடன் சுகபிரசவத்தை தேவன் தந்தற்க்காக தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : ஜமீன் சல்வார்பட்டி : சகோதரி. கவிதாவுக்கு நெஞ்சுவலியிருந்து கர்த்தர் பூரண சுகம் கொடுத்தற்க்காக தேவனைத் துதிப்போம். சபையில் மாலையில் தொடர்ந்து 3 விசுவாசிகளோடு ஜெபிக்க கர்த்தர் செய்த நன்மைக்கு தேவனைத் துதிப்போம்.

திருநெல்வேலி மாவட்டம் : பணித்தளம் : மைப்பாறை : லீதியா அம்மாவுக்கு ஆஸ்மா வியாதியிலிருந்து கர்த்தர் சுகம் கொடுத்தார். அதற்காக தேவனைத் துதிப்போம். சகோ. வெங்கடேஷ் என்ற சகோதரன் திருமணத்திற்காக ஜெபித்தோம் கர்த்தர் திருமணம் முடிய உதவி செய்தார். தேவனைத் துதிப்போம்

பணித்தளம் : திருவேங்கடம் : சின்னகாளன்பட்டியில் ஆலயத்திற்க்காக 2 சென்டு நிலம் வாங்கி பதிவு செய்ய தேவன் கிருபைச் செய்தார். அதற்காக தேவனைத் துதிப்போம். திருவேங்கடத்தில் நடைபெறுகிற ஆராதனைக்கு வருகிற புதிய ஆத்துமாக்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : அத்தியூத்து : சகோதரி. பிரிஸ்கில்லா திருமணத்தை கர்த்தர் சிறப்பாய் நடத்தி கொடுத்தற்க்காக தேவனைத் துதிப்பொம். சகோதரி. அஞ்சலிக்கு நல்ல மணமகனை கொடுத்து சிறப்பாய் நடத்தி தந்தற்க்காக



தேவனைத் துதிப்போம். சகோ.அருள் அவர்களுக்கு தேவன் கொடுத்த ஆசிரியர் வேலைக்காக தேவனைத் துதிப்போம்.

மதுரை மாவட்டம் : பணித்தளம் : திரளி : 2012ஆம் ஆண்டு முழுவதும் அநேக ஆபத்துக்கள் நெருக்கத்திலும் கர்த்தர் கூட இருந்து மிஷனெரி குடும்பத்தை மற்றும் விசுவாசிகள் யாவரையும் பாதுகாத்தார். தேவனைத் துதிப்போம். எல்லாம்மாள், தேவி, பாரதி தமிழ்செல்வி, முத்து, கணேசன் புதிதாக ஆராதனைக்கு வருகிறதற்க்காக தேவனைத் துதிப்போம்.

திண்டுக்கல் : மாவட்டம் : தொப்பம்பட்டி : சகோ.செந்தில்குமார் உமாமகேஸ்வரி பிரிந்திருந்த குடும்பத்தை தேவன் இணைத்து வைத்தற்க்காக தேவனைத் துதிப்போம்.

தூத்துக்குடி : மாவட்டம் : புதுக்கோட்டை : சகோதரி. அஜிட்டாசிலினுக்கு கர்த்தர் மீன்வளக்கல்லூரியில் வேலை கிடைக்க செய்தற்க்காக தேவனைத் துதிப்போம். வாகைகுளம் குடும்பமுகாமில் சுமார் 200 பேர் கலந்து கொண்டார்கள். எல்லா தேவைகளையும் சந்தித்து மீதி எடுக்க உதவி செய்தற்க்காக தேவனைத் துதிப்போம். பணித்தளம் : பண்ணைவிளை : ஏரலில் நடைபெற்ற சிறுவர் முகாமிற்கு 350 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : தாதன்குளம் : அரசகுளம் - சகோதரி. ரோஸி கணவன் மனைவி பிரிந்திருந்தர்கள் ஜெபித்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு இணைத்தற்க்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : தாளமுத்துநகர் : சரவணன் என்ற சகோதரனுக்கு டெங்கு காய்ச்சலிருந்து பூரண சுகம் கொடுத்தற்க்காக தேவனைத் துதிப்போம். சகோதரி. சோபியா விபத்தில் பாதிக்கப்பட்டு கால் நடக்கமுடியாமல் இருந்த நிலைமாறி நடக்க தேவன் கிருபைச் செய்தார். அதற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : திருக்களூர் : சகோதரி. சுப்பாம்மாள் கணவன் மனைவியுமாக பிரிந்து வாழ்ந்துவந்தார்கள் ஜெபித்தோம். தேவன் இணைத்து வைத்தற்க்காக தேவனைத் துதிப்போம். செம்பூர் : சகோதரி. எஸ்தரின் கணவன் ரஜினி அவர்களுக்கு தேவன் சென்னையில் நல்ல வேலை கிடைக்க உதவிச் செய்தார். அதற்க்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : பேட்மாநகரம் : சகோதரி. வசந்தி அவர்களுக்கு காலில் அடிப்பட்டு நடக்க முடியாமல் இருந்தார்கள். தேவன் நல்ல சுகம் கொடுத்து நடக்க உதவி செய்தார். நல்ல வேலையும் கிடைக்க உதவி செய்தார். அதற்க்காக தேவனைத் துதிப்போம். பேரூர் : சகோதரி. கலாவிற்கு பேட்மாநகரம் பகுதியில் வீடு கட்டுவதற்கு இடம் கிடைத்தது. அதில் வீடு கட்டப்பட தேவன் உதவி செய்தார். அதற்க்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : ஸ்ரீமூலக்கரை : ஆலயத்தில் புதிதாக ஆத்துமாக்களை தந்தற்க்காக தேவனைத் துதிப்போம்.

## பணித்தளங்களுக்காய் முழங்காலில்...

தூத்துக்குடி மாவட்டம் : பெரியநாயகபுரம் ( தலைமை அலுவலகம்) தலைமை அலுவலகப்பணிகள் முழுமுவதும் நேர்த்தியான முறையில் நடைபெற ஜெபியுங்கள்.

பணித்தளம் : தட்டப்பாறை : மேலத்தட்டப்பாறை : ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட தெற்குச் சிலுக்கன்பட்டி : ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்படவும், ஆராதனைக்கு தேவன் ஆத்துமாக்களை கொண்டுவர ஜெபியுங்கள்.

பணித்தளம் : ஆண்டாள் நகர் : முதியோர் இல்லத்தில் இருந்து ஆலயத்திற்கு கடந்து வரும் பெரியவர்கள் வாழ்க்கையில் காணப்படும் கவலைகள் மாறவும், தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள ஜெபியுங்கள். ராஜாராமன் நகர் காலணி: இங்கு நடைபெறும் ஆராதனையில் விசுவாசிகள் வாஞ்சையுடன் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

பணித்தளம் : ஸ்ரீ மூலக்கரை : செந்தூரன் என்ற சகோதானுக்கு இடுப்பிற்கு கீழ் செயல் இழந்திருக்கிற உறுப்புகள் செயல்பட, குடும்பம் இரட்சிக்கப்பட, பரமானந்தம் என்ற சகோதரியின் விவசாயம் ஆசீர்வதிக்கப்பட, தேவபாக்கியம் என்ற சகோதரியின் விவசாயபணிகள் ஆசீர்வதிக்கப்பட, ஜெயா, செல்வி சகோதரியின் வாழ்க்கைக்கு ஏற்றத்துணையை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.

திருப்புளியங்குடி : கட்டப்பட்டு வரும் ஜெபவீட்டிற்குரிய தேவைகள் சந்திக்கப்படவும், தடைகள் மாற, வாலிபர்கள் தடையின்றி ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள் வேலைவாய்ப்பிற்காக காத்திருக்கிற மாலதி, புனிதா, பிரபா, உஷா, தேவிப்ரியா ஷர்மிளா, மாரிசெல்வி, சண்முகசுந்தரி நல்ல வேலை வாய்ப்பு கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : பேட்மாநகரம் : பேரூர் - சகோதரி கலா அவர்களின் வீடு கட்டுவதற்கு பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். முத்துச்சாமிபுரம் : சகோதரி லட்சுமி அவர்களுடைய 5 பிள்ளைகளின் இரட்சிப்பிற்காகவும், அவர்களின் கஷ்டம் நீங்கவும் ஜெபியுங்கள். மீனாட்சிபட்டி : சகோதரி. புஷ்பம்மாள் அவர்களின் மகள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : பட்டாண்டிவிளை : Arts College Hostel : படிக்கிற பெண்கள் ஜெப வாழ்க்கையில் வளர பிள்ளைகளுக்கு பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். பண்ணைவிளைபுதூர் : சகோதரி சாந்தி அவர்கள் வீட்டில் நடைபெறும் ஜெபக்கூட்டத்தில் ஜெபிக்கிற அநேக பெண்கள் கலந்து கொள்ளவும், ஜார்ஜ் அவர்கள் குடும்பத்தில் சமாதானம் உண்டாக ஜெபியுங்கள். கண்ணான்டிவிளை: ஜெனிட்டா என்ற தங்கை பின்மாற்றத்தில் இருந்து விடுதலைபெற, கவிதா என்ற வாலிப சகோதரி ஜெபக்குழுவில் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

பணித்தளம் : புதுக்கோட்டை : வாகைக்குளம் - சகோதரி லெட்சுமி இவர்களது குடும்பத்தில் சமாதானம் உண்டாக, சகோதரி ராணிக்கு வீடு கிடைக்கவும்,



சகோதரி செல்விக்கு ஏற்றத்துணை கர்த்தர் தரும்படியாக ஜெபியுங்கள். புதுக்கோட்டையில் அற்புதத்தின் மாலையில் அநேகர் கலந்து கொள்ளவும் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். இந்திராநகர் : பிரையண்ட் நகர் : இங்கு நடைபெறும் அற்புத உபவாச ஜெபத்திற்கு புதிய ஆத்துமாக்கள் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

பணித்தளம் : பிரமுத்துவிளை - திருமணத்திற்காக காத்திருக்கும் பென்னி, ஜெபாநவமணி ப்ரியா, இவாஞ்சலின், மேரிவசந்தி, அனிட்டா இவர்களின் வாழ்க்கைக்கு ஏற்றத்துணையை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.

பணித்தளம் : தாதன்குளம் - சேரகுளம் : மரியாள் என்ற சிறுமிக்கு அடிக்கடி வரும் தலைவலியிலிருந்து பூரண சுகம் உண்டாக ஜெபியுங்கள். கருங்குளம் : நவீன் கார்த்திக் என்ற சிறுவனுக்கு கை கால் தளர்ச்சியிலிருந்து நல்ல சுகம் உண்டாக ஜெபியுங்கள்.

பணித்தளம் : தாளமுத்துநகர் : சகோதரர் ராபினுக்கு நல்ல வேலை கிடைக்க

பணித்தளம் : பழைய அப்பனேரி : சக்திவேல் என்ற சகோதரன் இரட்சிக்கப்பட செய்கின்ற தொழில் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

அரியலூர் மாவட்டம் : பணித்தளம் : மிஸ்பா - வெத்தியார்வெட்டு - இளையபெருமாள்நல்லூர் : சகோதரர் வைத்தியநாதன் அவர்களின் மகன் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார். பூரண சுகமடைய ஜெபியுங்கள். இவர்களில் கிரியை செய்கிற பொல்லாத ஆவியின் வல்லமைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள். பிச்சனூர் - நாகம்மாள் என்ற சகோதரியின் குடும்பம் முழுமுவதும் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

மதுரை மாவட்டம் : பணித்தளம் : திரளி : ஏனோக்கு என்ற சகோதருக்கு பயத்தின் ஆவி நீங்கவும், கர்த்தருக்கு சாட்சியாக வாழவும், அச்சம்பட்டி : ஞானசுந்தரியையும் பிள்ளைகளையும், பிசாசின் வல்லமைக்கு விலக்கி தேவன் பாதுகாக்கும்படியாக ஜெபியுங்கள். குமார் செல்வம் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் உண்டாக ஜெபியுங்கள்.

திருச்சி மாவட்டம் : பணித்தளம் : தோப்புப்பட்டி : ஜெயராணி என்ற சகோதரிக்கு விரோதமாக பில்லிசூனியத்திலிருந்து குடும்பத்தை கர்த்தர் பாதுகாக்கும்படியாக தோப்புப்பட்டி ஆலயத்தை சுற்றி பூசுவதற்கு தேவைகள் சந்திக்கப்படவும், வேலைகள் சீக்கிரமாக முடிவடைய ஜெபியுங்கள். சிறுவர் ஊழியங்கள் ஆராதனை குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

திண்டுக்கல் மாவட்டம் : பணித்தளம் : விராலிப்பட்டி : ஆலய ஆராதனையில் விசுவரிசகள் குடும்பமாக கலந்து கொள்ளவும், பாண்டி என்ற சகோதரருக்கு சொந்தமாக வீடு கிடைக்கவும், இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள். ராஜேந்திரன் என்ற வாலிப சகோதரன் நன்றாக வாய் பேசும்படியாக

பணித்தளம் : தொப்பம்பட்டி : நோட்டக்காரன் பட்டி : பின்மாற்றத்திலிருக்கிற பெரியவர்கள் முத்தம்மாள் ஆராதனைக்கு கடந்து வர, கோட்டூர்: சகோதரி சரோஜா 11 வருடங்களாகியும் குழந்தை இல்லை. தேவன் குழந்தை

பாக்கியத்தை தர ஜெபியுங்கள். அப்பாவுபிள்ளைபட்டி : சகோதரி லதா ஜவுளி வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட, லீலா செல்வி ஆகியோருக்கு திருமணக் காரியம் நடக்க ஜெபியுங்கள்.

திருப்பூர் மாவட்டம் : பணித்தளம் : பொங்கலூர் - ஆலயம் கட்டுவதற்கான தடைகள் நீங்கவும், புதிதாய் ஆராதனைக்கு வருவேன் என்று சொல்கிறவர்கள் ஆராதனைக்கு கடந்து வர ஜெபியுங்கள்.

திருநெல்வேலி மாவட்டம் : பணித்தளம் : திருவேங்கடம் : அற்புதத்தின் மாலை இயேசுவோடு இனிய வாலிபர் மாலையில், பெரியவர்கள், வாலிபர்கள் கலந்து கொள்ள ஜெபியுங்கள். சின்னகாளன்பட்டி : செல்லத்தாய் குடும்பம் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள். செவல்பட்டி : சரவணன் என்ற சகோதரருடைய திருமண காரியம் வாய்க்கும்படியாக, ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள். சத்திரம்பட்டி : பவுல்ராஜ் குடும்பத்தினர் கோழிப்பண்ணை தொழில் ஆரம்பிப்பதற்கு தேவன் கிருபை செய்யும்படியாக

பணித்தளம் : மைப்பாறை : பிரிந்து போன விசுவாசிகள் மறுபடியும் ஆராதனையில் கலந்து கொள்ள அகிலா என்ற சகோதரி M.C.A படித்துள்ளாள். நல்ல வேலை கிடைக்க ஜெபியுங்கள். பூமாரி (எ) தெபோராள் என்ற சகோதரி ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள். சோலைசேரி: சகோதரி அழுதா அவர்களின் வீடு கட்டுவதற்கு தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். குகன்பாறை : காசிராஜ் என்பவர்களின் வீடு சொந்தமாக மாற....

பணித்தளம் : அழகப்புரம் : நம்பிபத்து - ராஜேஷ் என்ற சகோதரர் இரட்சிக்கப்பட குடும்பத்தில் சமாதானம் உண்டாக, இசக்கியப்பன் என்ற சகோதரின் மனைவி இரட்சிக்கப்படவும் கடன்பிரச்சனை மாற ஜெபியுங்கள். வள்ளியூர் : பெல்ஸி, திவ்யா இவர்களுக்கு திருமணம் நடைபெற அழகப்புரம் : சுமதி, திவ்யா, மத்தேயு இவர்களின் திருமண காரியம் வாய்க்கப்பண்ணும்படியாக ஜெபியுங்கள்.

பணித்தளம் : அத்தியூத்து : சீதப்பநல்லூர் - முருகாயி என்ற சகோதரிக்கு பக்கவாத நோய் இருந்து சுகம் கிடைக்க, முனியப்பா பிள்ளை இரட்சிக்கப்பட

சிறுக்கன் குறிச்சி :சகோதரி மேரி மஞ்சுளா அவர்களின் திருமண காரியத்தை கர்த்தர் வாய்க்கச் செய்ய ஜெபியுங்கள். அத்தியூத்து : ஆலயம் கட்டுவதற்கு நல்ல இடம் கிடைக்க சகோதரி சின்னதாய் ஆராதனையில் கலந்து கொள்ள

பணித்தளம் : அச்சம்பட்டி : உமா மகேஷ்வரி என்ற சகோதரி மூளை வளர்ச்சியில்லாமல் நாக்கை கடித்து விடுகிறாள். வியாதிலிருந்து தேவன் விடுதலை தரும்படியாக ஆனந்தலட்சுமி என்ற சகோதரி கை ஊனமாக இருக்கிறாள் கை சுகமாக ஜெபியுங்கள்.

பணித்தளம் : அய்யனேரி : செவ்வாய் கிழமை நடத்தப்படுகிற உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்து கொள்ள ஜெபியுங்கள். ஆலயம் கட்டுவதற்கு



அனுமதி கிடைக்கவும் கட்டுமான பணிகளை தொடங்கவும், தேவன் கிருபை செய்யும்படியாக ஜெபியுங்கள். புளியங்குளம் : சகோதரி சுப்புலட்சுமி மகள் வனிதாவுக்கு கர்த்தர் குழந்தை பாக்கியம் தரும்படியாக ஜெபியுங்கள். சகோதரி கௌசல்யாவுக்கு 13 ஆண்டு ஆகியும், குழந்தை இல்லை, தேவன் குழந்தை பாக்கியம் கட்டளையிட ஜெபியுங்கள்.

விருதுநகர் மாவட்டம் : பணித்தளம் : ஏழாயிரம்பண்ணை - இயேசுவோடு இனிய மாலையில் அநேகர் வாலிபர்கள் கலந்து கொள்ளவும், மாதம் தோறும் தடையில்லாமல் நடைபெறவும் ஜெபியுங்கள். சிவசங்குப்பட்டி : வீரலட்சுமி என்ற சகோதரிக்கு சரீரத்தில் உள்ள பெலவீனங்கள் மாறவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : முத்தாண்டியாபுரம் : ரெட்டியப்பட்டி - சிறுபிள்ளைகள் குடிபழக்கத்திலிருந்து மனந்திரும்பவும், கீழ்மேட்டூர் : சிறுவர் ஊழியத்திற்கு காணப்படும் தடைகள் மாறவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : சாத்தூர் ரூரல் - மேரி என்ற சகோதரின் கணவர் இரட்சிக்கப்பட ஒத்தையால் - லிங்கராஜ் சகோதரர் சீக்கிரத்தில் நன்றாக நடக்கவும், ஆலயத்திற்கு வந்து சாட்சி சொல்ல ஜெபியுங்கள். ஸ்ரீரெங்காபுரம் - ஆர்த்தி என்ற சகோதரிக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : புல்லலக் கோட்டை : இயேசுவோடு இனிய வாலிபர் மாலையில் அதிகமான வாலிப சகோதர சகோதரிகள் கலந்து கொள்ளவும், நந்தியரெட்டியபட்டி: சிறுவர் கூடுகை நடைபெறுவதற்கு காணப்படும் தடைகள் மாற ஜெபியுங்கள். புல்லலக்கோட்டை ஆராதனைக்கு வரும் வாலிப பிள்ளைகள் பிரேமா, எப்சிபா, பூங்கொடி இவர்களின் வாழ்க்கைக்கு ஏற்றத்துணை கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : சிவகாசி - சகோதரி முத்து பிரின்ஸ்க்கு நல்ல வேலை கிடைக்க முத்துசாமிபுரம், ஆசாரிகாலணி, மானகசேரி ஆகிய ஆலயம் இல்லாத கிராமங்களில் சிறுவர் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : புல்லக்கவுண்டன்பட்டி - விசுவாச குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, சகோதரி சுமதி வீடு கட்டுமான பணிக்கு தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி செல்வி இவர்களுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் தந்தருளும் படியாக ஜெபியுங்கள்.

பணித்தளம் : ஜமீன் சல்வார்பட்டி : சகோதரர் சாமுவேல் குடும்பம் பின்மாற்றத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், சபைக்கு காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : N. திருவேங்கிடபுரம் - சகோதரி பிரேமா, சமுத்திரக்கனி இருவரும் நல்ல உடல் சுகம் பெற்று ஆலயத்திற்கு கடந்து வர, சகோதரி எலிசபெத்தின் மூத்த மகனுக்கு அரசுவேலை கிடைக்க ஜெபியுங்கள். கன்னித்தேவன்பட்டி : ஆலயம் கட்டும்பணி தொடங்கப்பட நடைபெற ஜெபியுங்கள்.

# God's own Good man.

"நெல்சன் மண்டேலாவின் வெற்றி என்பது தென் ஆப்பிரிக்காவில் ஒரு அற்புதமே. ஏன் இது அற்புதம் என்றால் தென்ஆப்பிரிக்க மக்களாகிய நாங்கள் நீதிக்காக ஜெபித்தோம்.

"மிகவும் மோசமான நேரங்களில் நாங்கள் ஜெபித்தோம். எங்கள் பார்வையில் மிகவும் மோசமாக காரியங்களில் தோன்றும் போதெல்லாம் ஜெபித்தோம். நாங்கள் ஜெபித்தோம். இறுதியில் எங்கள் ஜெபம் பதிலைப் பெற்றது" என்று கூறுவது தென் ஆப்பிரிக்க ஆங்கிலிக்கன் பிரதம பேராயர் டெஸ்மாண்ட்டூட்டு. இவர் தேசத்தின் இக்கட்டான நிலைமை உருவானபோதெல்லாம் ஜனத்தை தமது பிரசங்கங்களால் கூட்டி உற்சாகபடுத்தி ஜெபித்த அழைத்தார்.

கிறிஸ்தவம் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பவர்களை இவரால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை என்கிறார். கிறிஸ்தவமே அநீதிகளை எதிர்த்து நிற்க வேண்டும். கிறிஸ்தவமே அரசியலின் அசிங்கங்களை அகற்ற வேண்டும் என உறுதியாய் நம்புகிறார்.

நெல்சன் மண்டேலா சிறையிலிட்டபட்டபோது இவர் போராட்டத்தை முன்னின்று நடத்தினார். தற்போது இவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. இவர் ஜெபம் தேசத்திற்கு நற்செய்தியை கொண்டு வரும் என்கிறார். ஜெபத்தையும் வேதத்தையும் உறுதியாய் நம்பும் விசுவாசியாவார்.

இவர் கியர்க்ஸ்ட்ராப் (Lierksdrop) என்னுமிடத்தில் பிறந்தார். தனது கல்வியை கற்க. தேவையான பொருளாதாரத்தை பெற இவர் தென் ஆப்பிரிக்காவின் புறநகர் ரெயில்வே நிலையங்களில் கடலைவிற்று பணம் சம்பாதித்து கல்வி கற்றார் என்பதை சந்தோஷத்துடன் நினைவு கூறுகிறார்.

பின்பு இவர் பள்ளி ஆசிரியரானார். 1957ல் ஆசிரியர் பணியைவிட்டு விட்டு குருத்துவ பணிக்கு சென்றார். 1960ல் ஆங்கிலிக்கன் திருச்சபை இவரை போதகராக அபிஷேகம் செய்தது. பின்பு இவர் ஜோகன்ஸ்பர்-க்கில் தென் ஆப்பிரிக்க திருச்சபை பொதுச்சங்கத்தின் பொது காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் தனது கலங்கிய கண்களை துடைத்த வண்ணம் (Healing / We have lot of wounds to heal) இன்னும் குணமாக்கப் பட வேண்டிய காயங்கள் உண்டு என்கிறார். இவரது பேச்சில் Healing, Prayer (ஷேமம், ஜெபம்) என்ற இரு வார்த்தைகளே முக்கிய இடம் பெறுகின்றன. (ஆங்கில வேதாகமத்தில் 2 நாளா 7:14ல் ஷேமத்தை கொடுப்பேன் என்ற இடத்தில் Heal their land என்றிருப்பதை காண்க)

**நன்றி** Indian Express. **12.6.94.**

**நமது தேசத்தில் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய உத்தரவாதத்தை உணர்ந்து செயல்பட தேவன் விரும்புகிறார் என்பதை மறவாதிருங்கள்.**



## செய்திகள் :

1. அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலின் என்ற நோய் எதிர்ப்பு மருந்தைக் கண்டுபிடித்தார். அதற்காக அவருக்கு 1945இல் நோபல் பரிசு கொடுக்கப்பட்டது.
2. 50/- நோய் எதிர்ப்பு மருந்துகளை உலகெங்குமுள்ளவர்களும் நோளாளிகளும் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.
3. 70/- தீவிர சிகிச்சைப் பிரிவு நோயாளிகளுக்கு பல நோய் எதிர்ப்பு மருந்துகள் பலன் தருவதில்லை என்கிறது ஒரு இந்திய சர்வே.
4. 30/- இந்தியக் குழந்தைகள் நோய் எதிர்ப்பு மருந்துகள் பலன் தராததால் வருடந்தோறும் இறக்கின்றன.
5. 95/- அளவுக்கு நிமோனியா ரத்தம் மற்றும் காயத் தொற்றுகள் இந்தியாவில் அதிகரித்துள்ளன. கடைசி நேர தீவிர சிகிச்சைகள் இதில் பலன் தராது.
6. நோய் எதிர்ப்பு மருந்துகளிடம் தடுப்பாற்றல் கொண்ட கிருமிகளால் அமெரிக்காவில் 1 லட்சம் 80, 000 ஐரோப்பாவில் 25,000 உயிர்கள் வருடந்தோறும் பறிபோகின்றன.
7. நோய் எதிர்ப்பு மருந்துகளை தாக்குபிடித்து அதினால் அழியாது இரத்தத்தில் 27 சதவிகித கிருமிகளும் சிறுநீரில் 31 சதவிகித கிருமிகளும் நுரையீரலில் 38 சதவிகித கிருமிகளும் வசிக்கின்றன.
8. இந்தியாவில் நோய் எதிர்ப்பு மருந்துகளை தாக்குபிடித்து அழியாது உயிரில் இருக்கும் கிருமிகளில் 28 சதவிகித கிருமிகள் குறைந்த ஆபத்துள்ளவை. 72 சதவிகித கிருமிகள் அதிக ஆபத்தானவை.
9. இந்தியாவில் நோய் எதிர்ப்பு மருந்துகளை தாக்குபிடித்து அழியாது உயிரில் இருக்கும் கிருமிகளில் 28 சதவிகித கிருமிகள் குறைந்த ஆபத்துள்ளவை. 72 சதவிகித கிருமிகள் அதிக ஆபத்தானவை.
10. பெரிய நகரங்களின் குழாய் தண்ணீரில் சாக்கடைகளில் கொல்லும் கிருமிகள் உன்னை மருந்து தொழிற்சாலை கழிவுகளாலும், கால்நடை பயிர்களில் பயன்படுத்தும் நோய் எதிர்ப்பு மருந்துகளாலும், மனிதர்களிடையே நோய் எதிர்ப்பு மருந்து தடுப்பாற்றல் கிருமிகளின் ஆதிக்கம் அதிகமாகிறது.
11. 1987க்குப் பிறகு எந்தப் பெரிய நோய் எதிர்ப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை.

### விசேஷ ஜெபம்

10 மற்றும் +2 மாணவ மாணவியர்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும் தேவன் நல்ல ஞானம் தர, நன்றாக தேர்வு எழுத. எழுதிய, எழுதும் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற, நமது அலுவலகத்தில் தொடர்ந்து ஜெபம் நடைபெறுகிறது. இந்த ஆண்டு 14 கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்காக சிறப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. நீங்கள் மாணவ மாணவியர்களாக ஜெபியுங்கள்.

# முப்பெரும் முகாம் 2013

இடம் : **கெய்ன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,** ஆசீர்நகர், வள்ளியூர்

நாள் : **2013 மே 16 வியாழன் காலை 5 மணிக்கு ஆரம்பித்து**

**மே 18 சனி மதியம் 3 மணிக்கு முடிவடையும்.**

*தேவ செய்தி:*

சுவி. **சுகுமார்,** சகோதரி. **சுனித்தா சுகுமார்** துதி ஊழியங்கள், மதுரை

திருமதி. **S. கரோலின்** நாகர்கோவில்

சகோ. **G. அருள்தாஸ்** IFE மதுரை , சகோ. **P. சாம்ராஜ்** நெல்லை

சகோ. **B. பொற்செல்வன் ஆசீர்,** சகோ. **S. ஜெபராஜ்**

**மற்றும் நமது சகோதர சகோதரிகள்**

மற்ற விபரங்கள் அட்டையின் பின்பக்கம் பார்க்கவும்

---

## முப்பெரும் முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்

இதன் மொத்த தேவை ரூ. 1 இலட்சத்து 75 ஆயிரம்

### வெற்றி முகாம் – நடைபெறும் தேதி மே 16–18

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் வாலிப சகோதர சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

1. வெற்றி முகாமின் தேவை ரூ.60.000 சந்திக்கப்பட
2. ஏசா43:5-7 வசனங்களின் படி தேவன் முகாமிற்கு வாலிப சகோதர சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக...
3. ஏசா44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியானவரையும் ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற..

### குதூகல முகாம் – நடைபெறும் தேதி மே 16–18

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் சிறுவர்களின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

1. இம்முகாமின் தேவை ரூ.40.000 சந்திக்கப்பட
2. ஏசா54:14இன்படி முகாமிற்கு வரும் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட சமாதனம் பெருக..
3. மத்.19:14இன்படி சிறு பிள்ளைகள் முகாமில் தடையில்லாமல் கலந்து கொள்ள..

### வல்லமை முகாம் – நடைபெறும் தேதி மே 16–18

இம்முகாம் நமது கிருபையின் ஊழியங்களின் மூலம் குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக நடத்தப்படும் வருடாந்திர முகாமாகும்.

1. இம்முகாமின் தேவை ரூ.75.000./-சந்திக்கப்பட..
2. வல்லமை முகாமிற்கு வரும் குடும்பங்களின் வீடுகள் அப்12:12இல் உள்ள மரியாள் வீட்டைப் போல ஜெபவீடாக மாற...
3. அப்10:24இன்படி முகாமிற்கு வரும் குடும்பத்தினர் கொர்நேலியு போல் உறவினர் சிநேகிதர்களைக் கிறிஸ்துவுக்காய் ஆதாயம் பண்ணுகிற வர்களாய் மாற.. அவர்களை முகாமிற்கு தங்களுடன் அழைத்து வர..
4. முகாம் நடைபெறும் இடம் முழுவதையும் தேவன் ஆளுகை செய்ய



### மகிமையில் பரமனோடு

நமது திரளி மிஷனெரி துரைராஜ் தகப்பனார். திரு.D.ஞானசிகாமணி வயது 80. அவர்கள் 13.3.2013 அன்று மும்பை பட்டணத்தில் மறுமைக்குள் பிரவேசித்தார்கள். அவர்கள் குடும்பத்தினருடைய ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2013 ஏப்ரல் 24 கடைசி புதன்**

**காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**நீங்களும் வாருங்கள்!** **கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்

**நாள் : 2013 மார்ச் 30 – கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**

**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

### நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.